[செல்வி ஜெ ஜெயலலிதா] [2015 செப்டம்பர் 1

மருத்துவ உபகரணங்கள் வாங்கி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–35

2. சிறைத் துறைப் பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சிறைப் பணியாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் 100 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசால் கொள்கையளவில் ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015 ஆகிய ஆண்டுகளில் தலா 100 குடியிருப்புகள் வீதம் 300 குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இவற்றில் 100 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, சிறைத் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 100 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 100 குடியிருப்புகள் கட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. நடப்பாண்டில், மேலும் 100 களப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் வகையில், 14 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவினத்தில் புழல் வளாகம், பாளையங்கோட்டை மற்றும் கோவை ஆகிய மத்திய சிறை வளாகங்களில் தலா 30 குடியிருப்புகள், புதுக்கோட்டை Borstal school *மற்றும் மாவட்ட சிறை வளாகத்தில் 10 குடியிருப்புகள் என மொத்தம் 100 குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அறிவிப்புகள் சிறைத் துறை மேம்படவும் சிறைப் பணியாளர்கள் மேலும் செம்மையாகப் பணியாற்றவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) கடலாடி வட்டத்தில் அனல் மின் நிலையம் அமைத்தல், புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல் உள்ளிட்ட மின் துறைத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணால் காணமுடியாத, செயலால் மட்டுமே பார்க்கக்கூடியதும் நாட்டின் பொருளாதாரத்திலும், மனிதனின் வாழ்வாதாரத்திலும் முக்கிய பங்கு வகிப்பதுமான மின்சாரத் துறையில் தமிழகம் தன்னிறைவுபெறும் அளவுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு அளப்பரிய சாதனைகளைச் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

2015 செப்டம்பர் 1] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எனது தலைமையிலான அரசு 2011 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மின் திட்டங்கள், கூட்டு முயற்சித் திட்டம், மத்திய மின் உற்பத்தித் திட்டங்களிலிருந்து கிடைக்கும் பங்கு மற்றும் மின் கொள்முதல்மூலம், இதுவரை 5 ஆயிரத்து 954.5 மெகா வாட் மின்சாரம் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் பயனாக, தமிழக மக்களுக்கு தரமான மற்றும் தடையில்லா மின்சாரம் கிடைக்கப்பெற்று வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அதிகரித்துவரும் மின் தேவையைக் கருத்திற்கொண்டு, எனது தலைமையிலான அரசு, ஏற்கெனவே பல புதிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்க அறிவித்திருந்தது. அதில் 660 மெகா வாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம் மற்றும் தலா 660 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், எதிர்கால மின் தேவையைக் கருத்திற்கொண்டு, 800 மெகா வாட் திறன் கொண்ட வட சென்னை அனல் மின் திட்டம் நிலை—3, தலா 800 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய உப்பூர் அனல் மின் திட்டம், தலா 660 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய உடன்குடி அனல் மின் திட்டம் மற்றும் 660 மெகா வாட் திறன் கொண்ட 800 மாற்று அனல் மின் திட்டம் ஆகிய திட்டங்களுக்கான ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2,000 மெகா வாட் சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தலுக்கான பணி நடைபெற்று வருகிறது. இதேபோன்று, மின் கட்டமைப்பை வலுப்படுத்தும்விதமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட உள்ள திட்டங்களை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—40

1. தமிழகத்தை மின் நிலைமையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்ற, 'தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை 2023'

ஆவணத்தில் நிர்ணயித்த இலக்கான கூடுதல் 20,000 மெகா வாட் மின் நிறுவுதிறன் ஏற்படுத்தும் நோக்குடன் பல்வேறு திட்டங்கள் என்னால் அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தாலுகாவில் 4,000 மெகா வாட் திறன் கொண்ட ஒரு மாபெரும் அனல் மின் திட்டம் 24,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்திற்குத் தேவையான சுமார் 3,000 ஏக்கர் நிலம் கொண்டுநல்லான்பட்டி வருவாய்க் கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ளது. தேவையான திட்ட அனுமதிகளைப் பெற்றபின் இம்மின் திட்டம் தொடங்கப்படும்.

2. மின் கட்டமைப்பை வலுப்படுத்தும்வகையில், 400 கிலோ வோல்ட் மற்றும் 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் வட சென்னையில் 765/400 கிலோ வோல்ட், 3x1,500 எம்.வி.ஏ. திறன் கொண்ட தொகுப்பு துணை மின் நிலையம் 2,335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொகுப்பு துணை மின் நிலையம், அரியலூர் 765/400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் 400 கிலோ வோல்ட் புளியந்தோப்பு துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, வட சென்னை மற்றும் எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்ற வழிவகை செய்யும்.

3. மேலும், அரியலூரில் 765/400 கிலோ வோல்ட், 2x1,500 எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையம் 2,121 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துணை மின் நிலையம் 765/400 கிலோ வோல்ட் திருவலம் துணை மின் நிலையத்துடன் இணைக்கப்பட்டு, வட சென்னை மற்றும் எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தைக் கடத்துவதற்கு துணைபுரியும்.

4. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 765/400 கிலோ வோல்ட், 2x1,500 எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையம், 2,335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துணை மின் நிலையம், அரியலூர் 765/400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் 400 கிலோ வோல்ட் இடையார்பாளையம், ராசிப்பாளையம் துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, கோவை, சேலம் மற்றும் மேட்டூர் பகுதிகளின் மின் கட்டமைப்பை வலுப்படுத்தும்.

மேற்காணும் அறிவிப்புகள்மூலம் தமிழகம் மின்சாரத்தில் மின் மிகை மாநிலம் என்ற நிலையைப் பெறுவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் வளர்ச்சி மேன்மை அடைந்து வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) மாநில ஜவுளி ஆலோசனைக் குழு அமைத்தல், பட்டு வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட நெசவாளர் நலத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கினை வகிப்பதிலும், மரபு மற்றும் பண்பாட்டினைப் பாதுகாப்பதிலும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் கைத்தறி மற்றும் துணி நூல் துறையை ஊக்குவிக்கும் வண்ணமும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வண்ணமும், பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு கடந்த நான்கு ஆண்டுகளாக எடுத்து வருகிறது.

பிற்பகல் 12—45

கைத்தறி மற்றும் துணிநூல் தொழிலையும், நெசவாளர்களையும் மேலும் ஊக்குவிக்கும்வகையில் பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்:

(1) தமிழ்நாடு பல ஆண்டுகளாக இந்திய ஜவுளித் தொழிலில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. ஜவுளித் தொழிலின் பல்வேறு பிரிவுகளான, கைத்தறி, விசைத்தறி, நூற்புப் பிரிவு, ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைப் பிரிவுகளை மேலும் வலுப்படுத்தி